அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, அதுபோன்று இடம் இருக்குமேயானால், அதை அலுவலர்களிடம் சொல்லி, மரக் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

219—

கால்நடை மருத்துவமனை

***38716—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதகுளத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கள்ளத்தி என்ற கிராமத்திலேதான் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதே மாதிரி, மருதகுளத்திலிருந்து நாங்குநேரிக்கு 15 கிலோ மீட்டர் போனால்தான் ஒரு கால்நடை ஆஸ்பத்திரி இருக்கிறது. அதனாலே அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக மருதகுளத்திற்கு அமைத்துக் கொடுத்தால்தான், அங்கிருக்கிற அந்த விவசாயப் பெருமக்களுக்கும், அங்கே பால் கறந்து

2008 மே 7]

விற்பவர்களுக்கும் உறுதுணையாக இருக்கும். உங்கள் துறையில் நிதி இல்லாவிட்டாலும், முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு, கண்டிப்பாக எங்களுக்கு வாங்கித் தர வேண்டுமென்று நமது சட்டப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்றுப்படி, மருதகுளம் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 55,000 உள்ளதாலும், மேற்படி ஒன்றியத்தில் கிளை நிலையங்களும் அமையப் பெறாததாலும், தேவையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ஜவ்வாதுமலையிலே கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கடந்த 8 ஆண்டுகளாகக் கேட்டு வந்தேன். நம்முடைய அமைச்சரிடத்திலே கேட்டேன், பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். நேற்றைக்குக் கேட்கும்போது, தரம் உயர்த்தித் தரப்படும் என்று சொல்கிறார்கள். இன்னும் அங்கு மருத்துவமனையே இல்லை. ஆகையால், மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அங்கு 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்ய வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் வந்து, திருப்பத்தூரிலே சிகிச்சை செய்ய வேண்டும். ஆகவே, மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால், இந்த ஆண்டே அந்த மருத்துவமனையைத் தொடங்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிவிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய துறையின்மூலம் சுமார் 444 கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, தரமான மருத்துவ சேவைக்கான கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, அருகிலே ஏதாவது கிராமத்திலே கிளை நிலையங்கள் இருந்தால் விவரங்களைச் சொல்லுங்கள், தரம் உயர்த்தித் தருகிறோம், 4 கிளை நிலையங்கள்கூட கொடுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். இப்போது அவருடைய ஜவ்வாது மலையிலே அந்தப் பகுதியில் கட்டாயத் தேவை ஏற்படின், பார்வை மையங்களை இந்த அரசு அமைத்துத் தரலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய கட்டடத்தை அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டித் தருவாராயின், பார்வை நிலையங்கள் அமைக்கப்படும். அதேபோல அவருடைய தொகுதியில் கிளை நிலையங்களும் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் என்பவை விவசாயத் தொழிலை ஒட்டியவையாகும். அப்படிப்பட்ட கால்நடைகளுக்கு நோய் வரும்போது சில பிரச்சினைகள் எழுகின்றன. ஏனென்றால், கால்நடைகளை வழியிலே இழுத்துக்கொண்டு வரும்போது, சில வழித்தடங்களிலே நெரிசல் பிரச்சினை ஏற்பட்டு, அந்தக் கால்நடைகள் மனிதர்கள்மேல் மோதுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால், கால்நடைகளுக்கு என்று ஒரு நடமாடும் மருத்துவமனையை ஏற்படுத்தினால், ஒரு யூனியனுக்கு ஒரு நடமாடும் மருத்துவமனை இருந்தால்கூட, கிட்டத்தட்ட 10 ஊர்களிலுள்ள கால்நடைகளைக் கவனிக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நடமாடும் கால்நடை மருத்துவமனையை உருவாக்கி, அதிலே ஒரு டாக்டர், ஒரு உதவியாளர், ஒரு ஓட்டுநர் என்ற அடிப்படையிலே அது இருந்தால், நிச்சயமாக 10 சிற்றூர்களுக்குச் சென்று கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் இருக்கும். அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடமாடும் கால்நடை மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2008 மே 7]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்போல, உயர் இரகக் கலப்பினப் பசுக்களெல்லாம் நீண்ட தூரம் அழைத்துச் செல்லப்படுகின்றபோது, நோயின் தாக்கம் அதிகரிக்கப்பட்டு அவை இறக்க நேரிடும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டு தக்கலைக் கோட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்களும், குடியாத்தம் கோட்டத்திற்குத் திருமதி லதா அவர்களும், தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனத்தை வாங்கித் தந்துள்ளார்கள். இந்த அரசு mobile unit, அதாவது நடமாடும் கால்நடை மருந்தகத்தைத் தொடங்கியிருக்கின்றது. அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் துறைக்கு ஒத்துழைப்புத் தருவாராயின், உடனடியாக இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

220—

வணிக வளாகம்

***35108—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் கோத்தகிரியில் தாட்கோமூலம் வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரியில் தாட்கோமூலம் வணிக வளாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.